கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : கூட்டுறவு சொசைடிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆந்திராவில் இருந்து நெல்லூர் அரிசி வாங்கி விற்கிறார்கள்.

Rice procurement

* 588 Q.—Sri M. KALYANASUNDARAM. }
Sri T. P. ALAGAMUTHU : } Will the Hon Minister for Food be pleased to state—

(a) the details of the modified scheme of procurement of rice and paddy in the State for the year 1963–64;

(b) the target fixed for building up the stock in the State and the actual quantity procured in each district in 1962 and 1963; and

(c) whether samples of rice procured would be kept in the Legislature Library for inspection by the Members?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ)—(உ) சபையில் ஓர் அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

* 589 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி, }
திரு. ப. உ. சண்முகம் : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல் எவ்வளவு டன்?

(இ) கொள்முதல் செய்ய கடைபிடிக்கும் கொள்கை என்ன? கொள்முதல் விலை மூட்டைக்கு எவ்வளவு?

(உ) கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி மத்திய சர்க்காரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டதா? அப்படியாயின் அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ), (இ), (உ) : 8-1-1964 முதல் 27-6-1964 வரை அமுலில் இருந்த கட்டாய கொள்முதல் திட்டத்தின் கீழ் அரிசி மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. நெல் அல்ல. அரிசி மில் சொந்தக்காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் மட்டுமே அரிசிக் கொள்முதல் செய்யப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கையாயிருந்தது. ஆனால் அதே நேரத்தில் நெல் உற்பத்தியாளர்கள் அவர்களாகவே கொடுத்தால் அந்த நெல்லைக் கொள்முதல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரிசிக் கொள்முதல் விலையிலிருந்து நெல்லைத் தீட்டுவதற்கும் மற்றத் தொடர்பான செலவுகட்கும் ஆகும் கட்டணங்களைக் கழித்துக்கொண்டு விலை கொடுக்கப்பட்டது. உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைந்த அளவு விலையை நிர்ணயிப்பதும், வியாபாரிகள் அரிசிக் கொள்முதல் விலைகளைக் காட்டி நெல் கொள்முதல் விலைகளை அதிகமாய் குறைந்து

---

a 532–534–ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.